# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்)

**சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆனந்த அளுத்கமகே அவர்களால் 2017, யூன் மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *185 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்)

## சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூகசேவைகள் அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

“சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும், பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

***1.*** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம்” என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் அது பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) வறியோர் அநாதைகள் மற்றும் நோயாளர்களுக்கு வைத்திய நிவாரணம், உணவு வழங்குதல் ;

(ஆ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப்பரிசில்கள், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகள் வழங்குதல்;

(இ) ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில், க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த) ஆகிய பரீட்சைகளுக்காக தோற்றும் மாணவர்களுக்காக விசேட புலமைபெற்றவர்களைக் கொண்டு விசேட மேலதிக வகுப்புக்களை நடாத்துதல்;

(ஈ) சிரேஷ்ட பிரசைகளின் இயக்கங்களினால் ஆற்றப்படும் சேவைகளுக்கு ஆதரவளித்தலும் ஊக்கமளித்தலும்;

(உ) தேவையுள்ள சிறுவர்களின் ஆரம்ப சிறுபராய அபிவிருத்திக்கென முன்பள்ளிப் பாடசாலைகளை தாபித்தலும் கொண்டுநடாத்துதலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குப் புலமைப் பரிசில் என்றவகையில் உதவியளித்தல்;

(எ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள ஒத்த கழகங்களுடன் புரிந்துணர்வையும், ஒத்துழைப்பையும், நற்புறவையும் மேம்படுத்துதல்;

(ஏ) சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை ஒன்றிணைத்து அவர்களது எதிர்கால முன்னேற்றத்திற்காக செயற்படுதல்;

(ஐ) இலங்கையினுள் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து செயற்படுத்தல் மற்றும் அவற்றிற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குதல்;

(ஒ) வீண்விரயம், துஷ்பிரயோகங்களை இல்லாதொழித்து எமது மக்களிடமுள்ள அனைத்து வளங்களையும் மிக கிரமமான முறையில் பிரயோகித்தல்;

(ஓ) சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கான சமூக வேலைத் திட்டங்களை உருவாக்கி அதனை அமுல்படுத்துவதும் அதற்கான கல்வி மற்றும் பயிற்சிக் கருத்திட்டங்களை அமுலாக்கல்;

(ஔ) குறைவருமான குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் வாய்ப்புகளை அடைந்துகொள்ளும் விதமான தொழில்நுட்ப, கைத்தொழில் மற்றும் கணனிப் பயிற்சி பாடத்திட்ட நிலையங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தல்;

(ஞ) கமத்தொழில்துறையில் இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அவர்களை ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்காக ஊக்குவித்தல் மற்றும் அதற்குத் தேவையான உள்நாட்டு வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்காக தேவையான காணி நிலங்களை பெற்றுக்கொடுத்தல்;

(ட) இயற்கை அனர்த்தங்கள், திடீர் அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் வேளையில் உதவி உபகாரங்கள் செய்தல்;

(ண) உயர்கல்விக்கான வாய்ப்பினை எட்டாத இளைஞர் யுவதிகளுக்கு பொறியியல்துறை, கைத்தொழில்துறை, தச்சுத்தொழில், வாகன ஓட்டுநர், கணனித் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதும் அவர்களை அவ்வாறான தொழில்களில் ஈடுபடுத்துவது மற்றும் அவசியமான தொழில்கற்கை நிலையங்களை ஆரம்பித்தல்; அத்துடன்

(வ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும்;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக் கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும் புறக்குறிப் பிடுவதற்கும், பேச்சுவார்த்தைமூலம் பெறுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும், வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், பிணைப்பொறுப்புடனோ பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடுசெய்வதற்கும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்தப் பெறுவதற்காக எவரேனும் ஆளுடன், இலங்கையிலோ வெளிநாட்டிலோ கூட்டிணைக்கப்பெற்ற அல்லது கூட்டிணைக்கப்பெறாத ஆட்களின் குழுமத்துடன் அல்லது ஏதாவது அரசாங்கத் திணைக்களத்துடன், கூட்டுத்தாபனத்துடன், சபையுடன், மாகாண சபையுடன், உள்ளூரதிகார சபையுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல்;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பணிப்பாளர் நாயகம், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடிய ஏழு பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றின் மூலம் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாகப் பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்றவகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** *(1)* கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்கு செலுத்தப்படவுள்ளதுமான கடன்கள்.

**10**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதி யன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**11**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத் தாபனத்தினால் வைத்திருக்கப்படு தலும் வேண்டும்.

கலைப்பின்போது எஞ்சியுள்ள ஆதனம்.

**12**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த

குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏணையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்